DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.456/2016**

**P.W.27**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | சுஜாதா |
| Husband Name | : | சரவணன் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2025**.**

( 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை. 1வது எதிரி சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 7வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார் )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது விளக்குதூண் குற்றபிரிவு காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2015ம் ஆண்டு புதுார் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது ஆய்வாளர் அவர்களின் உத்தரவுபடி மதுரை அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த **அ.சா.1** ராமகிருஷ்ணன் த.பெ. சுப்பிரமணியன் என்பவரிடம் **அ.சா.ஆ.1** புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண்.1017/2015 பிரிவுகள் 341, 294(b), 307 இ.த.ச வாக வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் புகார் வாக்குமூலத்தையும், முதல் தகவல் அறிக்கையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், மேல்விசாணைக்காக ஆய்வாளர் அவர்களின் விசாரணைக்காக வைத்தேன்.

**1 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எனக்கு தேவதாஸ் மருத்துவமனை தெரியும்.அந்த மருத்துவமனை ஆள்வரை எல்கைக்குள் உள்ளது. அந்த மருத்துவமனைக்கும் எங்கள் காவல்நிலையத்திற்கும் இடையே சுமார் 500 மீட்டர் தொலைவு இருக்கும். மேற்படி தேவதாஸ் மருத்துவமனைக்கு சட்டம் சார்ந்த மருத்துவ நோயாளிகளை பார்ப்பதற்கு அதிகாரம் உண்டு என்றால் சரிதான். பொதுவாக, காயம்பட்ட நபர் நேரடியாக அந்த மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றால் அங்கிருந்து எங்கள் காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்படும். அவ்வாறு தகவல் தெரிவிக்கும்படும் பட்சத்தில் அந்த மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருக்கும் காயம்பட்ட நபரிடம் இருந்து வாக்குமூலம் வாங்குவது வழக்கம் என்றால் சரிதான். அவ்வாறு வாக்குமூலம் வாங்கும்பட்சத்தில் அதனை முதல் தகவல்அறிக்கையில் பதிவு செய்வோம் என்றால் சரிதான். மேலும், காயம்பட்ட நபர் அந்த மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தால் அந்த மருத்துவமனையில் விபத்து பதிவேட்டு நகல் பெறுவோம் என்றால் சரிதான். இந்த வழக்கில் காயம்பட்ட நபர் முதலில் சிகிச்சைக்கு தேவதாஸ் மருத்துவமனையில் சேர்ந்த விபரம் எனக்கு தெரியவந்ததா என்றால் எனக்கு தெரியவரவில்லை. மேற்படி மருத்துவமனையில் இருந்து எனக்கு தகவல் மற்றும் ஆவணங்கள் வந்திருந்தது என்றும், நான் அந்த மருத்துவமனைக்கு சென்று **அ.சா.1** ராமகிருஷ்ணனை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன் என்றும் அந்த விபரங்கள் வழக்கிற்கு விரேதமாக இருந்தது என்று மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் மதுரை அப்பல்லோ மருத்துவமனைக்கு சென்ற போது அங்கு வைத்து மதுரை அப்பல்லோ மருத்துவமனை சம்மந்தப்பட்ட **அ.சா.1** ராமகிருஷ்ணன் உடைய மருத்துவ நமூனா மற்றும் விபத்து பதிவேட்டு நகலை பெற்றேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் அ.சா.1 ராமகிருஷ்ணனனை மதுரை அப்பல்லோ மருத்துவமனை சென்று விசாரித்து போது, மருத்துவர் இருந்தாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. அவ்வாறு மருத்துவர் இருக்கும்பட்சத்தில் காயம்பட்ட நபருடைய உடல்நிலை மற்றும் மனநிலை குறித்து மருத்துவரிடம் சான்று

பெறவேண்டும் என்பது எனக்கு தெரியும். நான் அவ்வாறு சான்று எதுவும் பெறவில்லை. நான் அப்பல்லோ மருத்துவமனைக்கு சென்ற போது காலை 08.00 மணி முதல் காலை 08.30 மணி இருக்கும். நான் அந்த புகாரை பெற்றுவிட்டு நிலையம் வந்த போது காலை 10.30 மணி இருக்கும். மேற்படி முதல் தகவல் அறிக்கை காலை 10.30மணிக்கு தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எங்கள் காவல்நிலையத்தில் இருந்து, மதுரை நீதித்துறை நடுவர் எண்.6 இடையே அரை கி.மீ தூரம் இருக்கும். எங்கள் காவல்நிலையத்தில் இருந்து, மதுரை நீதித்துறை நடுவர் எண்.6 செல்லும் வழியில் தான் நீதித்துறை நடுவர்கள் குடியிருப்புகள் அமைந்துள்ளது என்றால் சரிதான். நான் சொன்னபடி புகார் எதுவும் பெறப்படவில்லை என்றும் ஏற்கனவே பெற்ற புகார்கள் மறைக்கப்பட்டு பின்னிட்டு நிர்பந்தத்தின்பேரில் இந்த புகாரும், முதல் தகவல் அறிக்கையும் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**2 மற்றும் 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 2 மற்றும் 7 எதிரிகள் தரப்பில் ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை –** இல்லை.

S/d– S.John Sundaral Suresh, B.Sc., M.L.,

IV Additional District Judge, Madurai.